தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 30.

பங்குனி 17, துன்மதி—திருவள்ளுவர்-ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" வகையறிந்து வல்லவை வாய்சோரார், சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர் "

சொற்களின் அமைப்பையும் அழகையும் அறிந்த தூய்மை உடையவர் அவையில் உள்ளோரின் இயல்புகளை அறிந்து வல்லவர் கூடியுள்ள அவையில் வாய் சோர்ந்து பிழையானவற்றைச் சொல்லமாட்டார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சாயர்புரத்தில் வாசனைத் திரவியங்கள் தயார் செய்யும் திட்டம்.

*வினா எண் 607—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்தில் வாசனை திரவியங்கள் தயார் செய்யும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாயர்புரத்தில் வாசனை எண்ணெய் தயாரிப்பதற்காக தொழிற்சாலை ஒன்றை திருவாளர்கள் செண்பகம் பார்ம்ஸ் லிமிடெட் என்ற பெயரில் தனியார் துறையில் நிறுவியுள்ளார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய்மதிப்பீட்டில் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட்டுள்ளது? அந்தத் தொழிற்சாலைக்கு வெளிநாட்டு உதவி ஏதாவது கிடைக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 30

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சாயர்புரத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்தத் தொழிற்சாலையில் தற்போது 25 லட்சம் பெறுமானம் உள்ள வாசனைத் திரவியங்கள் செய்யும் உற்பத்தித் திறனை உடையதாக இருக்கிறது. 20 தொழிலாளர் களுக்கு 100-க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு அந்தத் தொழிற் சாலை வேலைவாய்ப்பு நல்குகிறது. அந்தத் தொழிற்சாலை Yeden of Reggio calabaria Italy என்ற நிறுவனத்தோடு தொழில் கூட்டுறவுடன் சாயர்புரத்தில் தொடங்கப்பட்டு இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரத்தில் வாசனைத் திரவி யங்கள் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருட்கள் கிடைக்கிறதா? அந்தத் தொழிற்சாலையில் வேறு என்ன என்ன பொருள்கள் தயார் செய்யப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்தத் தொழிற் சாலைக்கு தேவைப்படும் மூலப் பொருட்கள் அந்தப் பகுதியிலே அவர்களே, மல்லிகை ஏறத்தாழ 40 ஏக்கர், முல்லை 6 ஏக்கர், செண்பகம் போன்ற செடிகளை அந்த நிறுவனமே அவர் களுக்குச் சொந்தமாகவே பயிரிடுகிறார்கள்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மல்லிகை, முல்லை என்று கூறினார்கள் அந்த மல்லிகை முல்லை தமிழ்நாட்டில் பரவலாக அதிகமாக விவசாயிகள் பயிர் செய்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே விவசாயிகள் அதிகமாகப் பயிரிடுகிறார்கள். ஆகவே ஆங் காங்கே பயிர் செய்யக் கூடிய பகுதிகளிலே வாசனைத் திரவியங்கள் தயாரிக்கின்ற—அந்தத் திரவியங்களுக்கு அதிக கிராக்கி இருப்ப தால்—தொழிற்சாலைகளை உருவாக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒட்டு மொத்தமாக 7 தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஒரு தொழிற்சாலை சின்கோ மூலமாக ஊட்டியிலே நடைபெறுகிறது. மற்ற 6 தொழிற்சாலைகளும் தனியார்களால் நடத்தப்படுகின்றன. தனியார்கள் நடத்த முன்வந்தால் அரசு எல்லா உதவிகளையும் செய்யும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, சாயர் புரத்தில் ஆரம்பித்திருக்கக் கூடிய வாசனைத் திரவியங்கள் செய்யும் தொழிற்சாலைக்கு வெளிநாட்டு உதவி கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழக அரசு பொருளா தாரத் துறையில் ஏதாவது உதவி செய்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்த விவரம் என்னிடத்திலே இல்லை.